# ஞானஸ்நானம்: முன் நிபந்தனைகளும் ஆசீர்வாதங்களும்

ஞானஸ்நானம் என்பது மாறுபட்ட பல நோக்கங்களைக் கொண்டுள்ளது என்று சிலர் நம்பும்படியான வழிமுறைகளில் ஞானஸ் நானத்துடன் தொடர்புடைய சில சத்தியங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. இந்த எடுத்துரைப்புகள் மாறுபட்ட நோக்கங்களை உள்ளடக்குவதில்லை, ஆனால் அதற்கு மாறாக இவை பின்வரும் நான்கு வகைப்பாடுகளில் அடங்குகின்றன:

*அ. முன் நிபந்தனைகள்* - ஒரு நபர் ஞானஸ்நானம் பெறுவதற்கு அவசியமான செயல்பாடுகள், எண்ணப்போக்குகள் மற்றும் ஆதார மூலங்கள்.

*ஆ. ஞானஸ்நானத்தில் பெறும் ஆசீர்வாதங்கள்* - விருப்பங்கள் மாறுபட்ட வழிமுறைகளில் விவரிக்கப்படுகின்றன ஆனால் அவை யாவுமே, தேவனுடன் உள்ள உறவில் காணும் தவறை நேராக்கிக் கொள்வதற்காக பாவமன்னிப்புப் பெறுதலுடன்தான் தொடர்பு கொண்டுள்ளது.

*இ. ஒருவரின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படுதல்* - இரட்சிப்படைய விரும்புபவரின் இருதயத்திலிருந்து வரும் கீழ்ப்படிதலின் விளைவு.

*ஈ. இரட்சிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்* - ஒருவரின் பாவங்கள் சுத்திகரிக்கப்பட்டதன் விளைவாகவும் தேவனுடன் சரியான உறவுமுறைக்குள் பிரவேசிப்பதன் விளைவாகவும் கிறிஸ்தவ வாழ்வில் பெறுகின்ற ஒவ்வொரு பயனும் அல்லது அனுகூலமும்.

இந்த வகைப்பாடுகளை நாம் இன்னும் நெருக்கமாகக் காண்போம்:

*அ. முன் நிபந்தனைகள்:*

1. இயேசுவைப் பற்றியும் அவரது வேண்டுகோள்களைப் பற்றியும் கேள்விப்பட்டுப் புரிந்து கொள்ளுதல் (அப். 18:8)
2. சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டபடியாக இயேசுவை ஆண்டவரென்றும் இரட்சகர் என்றும் விசுவாசித்தல் (மாற். 16:16)
3. பாவத்திற்கு ஊழியம் செய்வதிலிருந்து இயேசுவுக்கு ஊழியம் செய்ய மாறும்படியாகத் தீர்மானம் செய்வதன் மூலம் மனந்திரும்புதல் (அப். 2:38)
4. இயேசுவைக் கர்த்தரென்று விசுவாசத்தினால் அறிக்கையிடுதல்

*(ரோமர் 10:10)*

5. *அடக்கம் செய்யப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் (ரோமர் 6:4; கொலோ. 2:12) ஆகியவற்றிற்காக அதிகமான தண்ணீர் (யோவா. 3:23)*

*ஆ. ஞானஸ்நானத்தில் பெறும் ஆசீர்வாதங்கள்:*

1. *இரட்சிப்பு (மாற். 16:16; 1 பேது. 3:21)*
2. *பாவங்கள் மன்னிக்கப்பட்டுக் கழுவப்படுதல் (அப். 2:38; 22:16; கொலோ. 2:12, 13)*
3. *இயேசுவின் சரீரத்தினுள் பிரவேசித்தல் (1 கொரி. 12:13)*
4. *கிறிஸ்துவுக்குள் பிரவேசித்தல் (ரோமர் 6:3)*
5. *இயேசுவின் மரணத்திற்குள் பிரவேசித்தல் (ரோமர் 6:3)*

*இ. ஒருவரின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படுதல்:*

1. *ஞானஸ்நானத்தில் இயேசுவின் மரணத்தைப் பகிர்ந்து கொள்ளுதலின் விளைவாகப் பாவத்திற்கு மரித்தல் (ரோமர் 6:1-4; கொலோ. 3:3)*
2. *புதிய ஜீவன் (ரோமர் 6:4)*
3. *இயேசுவின் புதிய ஜீவனைப் போன்றுள்ள தன்மை (ரோமர் 6:5)*
4. *பழைய மனிதன் சிலுவையில் அறையப்படுதல் (ரோமர் 6:6)*
5. *மாம்ச இச்சைகளை இறக்கச் செய்தல் (ரோமர் 6:6)*
6. *பாவத்திற்கு ஊழியம் செய்தலை முடித்து வைத்தல் (ரோமர் 6:6, 18)*
7. *ஒருவரின் வாழ்வில் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை (ரோமர் 6:7, 17, 18)*
8. *நீதிக்கு ஊழியம் செய்தல் (ரோமர் 6:18)*
9. *இயேசுவை அணிந்து கொள்ளுதல் (கலா. 3:27)*
10. *மாம்ச இச்சைகளை விலக்குதல் என்ற ஆவிக்குரிய விருத்தசேதனம் (கொலோ. 2:11-13)*
11. *ஆவிக்குரிய வகையில் வாழ்விக்கப்படுதல் (கொலோ. 2:13)*
12. *மீண்டும் பிறத்தல் (யோவா. 3:3-5)*
13. *தேவனுக்குள் ஜீவன் கிறிஸ்துவுடன் மறைந்திருத்தல் (கொலோ. 3:3)*
14. *கிறிஸ்துவுக்குள் இருக்கும் யாவருடனும் ஒன்றாயிருத்தல் (கலா. 3:28)*

*ஈ. இரட்சிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்:*

1. *அகமகிழ்ச்சி (அப். 8:39)*
2. *பரிசுத்த ஆவியின் வரம் (அப். 2:38; 5:32; கலா. 4:6)*
3. *நம்பிக்கை (1 பேது. 1:3, 4)*
4. *தேவனுடன் ஐக்கியம் (யோவா. 14:21)*
5. *மற்ற கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் (அப். 2:42, 47)*
6. *கிறிஸ்துவுக்குள் வளருவதற்கான வாய்ப்பு (எபே. 4:15)*
7. *கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கின்ற ஆவிக்குரிய சகல*

*ஆசீர்வாதம் (எபே. 1:3)*

*8. தேவனுடைய தொடர்ந்த பராமரிப்பு (எபி. 13:5)*

*9. நல்மனச்சாட்சி (1 பேது. 3:21)*

*ஞானஸ்நானம் பெறுவதற்கு, (''அ''வின் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள எல்லா) முன் நிபந்தனைகளையும் நாம் நிறைவேற்ற வேண்டும். விசுவாசம் என்பது நமது உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் மீதுள்ள நம்பிக்கை என்று அர்த்தப்படுகின்றது. மனந்திரும்புதல் என்பது, இயேசுவுக்கு நம் வாழ்வை ஒப்புக் கொடுப்ப தற்காக கடந்த கால வாழ்வை விட்டு விடும் தீர்மானம் என்று அர்த்தப் படுகின்றது. இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாச அறிக்கை செய்தல் என்பது, நமது பாவத்திலிருந்து நம்மை விடுவிக்கக் கூடிய அவரைக் கர்த்தர் என்பதாக ஒப்புக் கொள்ளுதல் என்று அர்த்தப்படுகின்றது (ரோமர் 10:9, 10).[1]*

*இந்த முன் நிபந்தனைகளின்றி, ஆவிக்குரிய வகையிலோ அல்லது உடல் ரீதியாகவோ ஞானஸ்நானம் பெறு முடியாது மற்றும் மாற்றம் பெற்ற ஒரு வாழ்வு பின் தொடராது.*

*"ஞானஸ்நானத்தில் பெறும் ஆசீர்வாதங்கள்" என்ற வகைப் பாட்டில் (''ஆ''வின் கீழ்) அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொன்றும், மன்னிப்பு மற்றும் தேவனுடனும் கிறிஸ்தவர்களுடனும் புது வாழ்வில் பிரவேசித்தல் ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது, தேவனுடன் உள்ள உறவில் இருக்கும் தவறுகளை நேராக்குகின்றோம் என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம். இந்தப் புரிந்து கொள்ளுதலின்றி நாம் நமது பாவங்களைக் கழுவுவதற்காக பரிகார பலியான இயேசுவின் இரத்தத்தின் மீது விசுவாசம் கொண்டிருக்க முடியாது (ரோமர் 3:25). ஆகையால், மன்னிப்பு பற்றிய புரிந்து கொள்ளுதல் என்பது, மன்னிப்படைவதற்காக நாம் ஞானஸ்நானம் பெறுகையில் இயேசுவின் சுத்திகரிக்கும் இரத்தத்தின் மீது நாம் விசுவாசம் கொள்வதற்கு முந்திய தேவையாக இருக்கின்றது.*

*''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்" (மாற். 16:16) என்று சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட பொழுது இயேசுவின் கூற்றினால் இதே சத்தியம் போதிக்கப்பட்டது. "கிறிஸ்து வானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்தார்" (1 கொரி. 15:3, 4) என்ற உண்மையைச் சுவிசேஷம் உள்ளடக் கியிருக்கின்றது. இரண்டு எச்சவினைகளைக் (''விசுவாசித்து'' மற்றும் ''ஞானஸ்நானம் பெற்று'') கொண்ட கிரேக்கச் சுட்டுச் சொல்லானது அவ்விரு செயல்களும் ஒரே வேளையில் நடைபெற வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்றது. இதை மனதில் கொண்டு, ஞானஸ்நானம் பெறுகின்றவர் சுவிசேஷத்தை - தனது பாவங்களுக்காக இயேசு மரித்தார் என்பது - அவர் ஞானஸ்நானம் பெறுகையில் விசுவாசித்தவராய் இருக்க வேண்டும் என்பதை இயேசுவின் கூற்றிலிருந்து நாம் காண முடியும்.*

*மேலும் நாம், ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து ஒரு புதிய வாழ்வு வர*

வேண்டும் ("இ"யின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது) என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். ஆவிக்குரிய ஈடுபாடு இல்லாத ஞானஸ்நானம் புது வாழ்வைக் கொண்டு வருவதில்லை. நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது இயேசுவின் மரணம் மற்றும் அடக்கம் ஆகியவற்றுடன் ஆவிக்குரிய முறையில் இணைவதன் விளைவாகவே இந்தப் புதுவாழ்வு வருகின்றது. "ஒருவரின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படுதல்" என்ற தலைப்பின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொன்றும் பின்வரும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளன: நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது, மன்னிக்கப்படுவதற்காகவும் இயேசுவைப் பின்பற்றுவதற்கு அர்ப்பணிக்கப் பட்ட ஒரு புது வாழ்வை வாழ்வதற்காகவும் கடந்த கால வாழ்வை விட்டு விடுகின்றோம்.

இரட்சிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கின்ற எல்லா ஆசீர்வாதங் களையும் நாம் ஒருக்காலும் அறிந்து கொள்ளவோ அல்லது புரிந்து கொள்ளவோ முடியாமல் போகலாம். தேவனுடனான உறவில் உள்ள தவறை நேராக்கிக் கொள்ளவும் மற்றும் இயேசுவைப் பின்பற்றுவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட புது வாழ்வில் பிரவேசிப்பதற்கும் நாம் ஞானஸ்நானம் பெற்றவுடன் கணக்கற்ற ஆசீர்வாதங்கள் வருகின்றன. இவைகளில் ("ஈ"யின் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள) பல ஆசீர்வாதங்கள் நாம் கிறிஸ்தவ வாழ்வை வாழத் தொடருகையில் தெளிவாகின்றன.

ஞானஸ்நானத்தைத் திருமணத்துடன் ஒப்பிடலாம். திருமணம் முடிக்க வேண்டுமென்றால், ஒருவர் நாட்டின் சட்டத்தினால் கேட்கப்படுவது என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். திருமண வாழ்வில் சில ஆசீர்வாதங்களும் பயன்களும் புரிந்து கொள்ளப்படலாம், ஆனால் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. திருமண வைபவம் நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு (கூட) கூடுதலான ஆசீர்வாதங்கள் கண்டறியப்படலாம்.

இதே விஷயம் ஞானஸ்நானத்திற்கும் உண்மையானதாக உள்ளது: நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு அவசியமானது என்ன என்பதை நாம் விசுவாசித்து புரிந்து கொள்ள வேண்டும். இரட்சிக்கப்பட்டவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடிய பல ஆசீர்வாதங்களைப் பற்றி நாம் அறிந்துள்ள காரணத்தினால் நாம் ஞானஸ்நானம் பெற விரும்பலாம், ஆனால் கிறிஸ்தவருக்கு கிடைக்கும் சகல ஆசீர்வாதங்களையும் நாம் ஞானஸ்நானம் பெறுவதற்கு அறிய வேண்டும் என்ற அவசியம் இல்லை. (இந்த வெளியீட்டில் தொடங்குகின்ற "அறிவு, விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் பெறுவதில் தீர்மானம்" என்ற பாடத்தைக் காணவும்.)

அப். 2:38ல் eis ("க்குள்" என்ற நேரடி அர்த்தம் தரும் கிரேக்க வார்த்தை) என்பது "... என்று" ("for") என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதே வார்த்தையானது அப். 19:5ல் "... ஆலே" ("in") என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. பாவமன்னிப்புக்"கென்று" (கிரேக்கம்: eis) ஞானஸ்நானம் பெறுவதில் நாம் "மன்னிப்பு" என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அது போலவே நாம் யாருடைய பெயருக்"குள்ளாக" (கிரேக்கம்: eis) ஞானஸ்நானம் பெறுகின்றோம் என்பதையும் நாம் புரிந்து கொள்ள

வேண்டும். இயேசுவின் பெயரைத் தவிர வேறு ஏதாவது பெயருக்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பெறுவதாக விசுவாசித்தால்/நம்பினால் நமது ஞானஸ்நானம் செல்லத்தக்கதல்ல - ஏனெனில் வேறு எந்தப் பெயரும் இரட்சிப்பைக் கொண்டு வர முடியாது (அப். 4:12). நாம் எந்தப் பெயருக்குள் ஞானஸ்நானம் பெறுகிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் அதை ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றை eis என்ற வார்த்தையின் பயன்பாடு மறைவாய் உணர்த்துவது போலவே, நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது பாவமன்னிப்புக் கிடைக்கின்றது என்பதையும் இது மறைவாக உணர்த்துகின்றது. மன்னிப்பு என்பதைத் தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவும் பெறுகின்ற ஞானஸ்நானம் என்பது, இயேசுவின் பெயரைத் தவிர வேறு எப்பெயரினாலும் பெற்றுக் கொள்ளும் ஞானஸ்நானத்தைப் போலவே செல்லத்தகாததாக இருக்கும்.

---

குறிப்பு

[1]ரோமர் 10:9ல், மூல வசனத்தில் "அறிக்கையிடுதல்" மற்றும் "விசுவாசித்தல்" என்பவை ஒரு தரம் வருகின்ற நிபந்தனை வினைச் சொற்களாக (aorist subjunctive) உள்ளன. Subjunctive என்றால் இவைகள் நிபந்தனைக்குட்பட்டவை என்று அர்த்தப்படுகின்றது; aorist என்றால் இவைகள் தொடர் செயல்கள் அல்ல ஆனால் ஒரு தரம் மட்டும் நிகழும் செயல்கள் என்று அர்த்தப்படுகின்றது. இயேசுவைப் பற்றி மற்றவர்களிடம் அறிக்கை செய்வதைக் கிறிஸ்தவரான பிறகு ஒருவர் செய்யும் தொடர் செயல் என்ற வகையில் பவுல் அறிக்கையிடுதல் பற்றி எழுதவில்லை, ஆனால் கிறிஸ்தவராகும் பொழுது செய்கின்ற அறிக்கையைப் பற்றியே அவர் இவ்விடத்தில் எழுதினார். இது கிறிஸ்தவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டிய அறிக்கையாய் இருக்குமென்றால், நிகழ் கால வினைச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கும். கிறிஸ்தவர்கள் தினந்தோறும் இயேசுவை அறிக்கையிட வேண்டும், ஆனால் அது அவர்கள் இரட்சிப்படைவதற்காக அல்ல.